உ

சிவமயம்.

சற்குருவிளக்கப்ரசண்ட மாருதம்.

ஸ்ரீபிரகந்நாயகி, சமேத விருத்தபுரீசாயநம:
திராவிடவேதப்பிரதி பாத்திய சுத்த பரம்பரைப்
புராதநாசாரியசரணாரவிந்தாப்பியாநம:

கண்டனூர் நா. பெ. நா. முத்துராமையா என்பவர்களால் இயற்றப்பட்ட சற்குருவிளக்கம் என்றபுத்தகமொன்றைக் கண்டனம்.

இவர் நாட்டுக்கோட்டை நகரத்தாரி லொருவரெனவும்; வேதாந்தநூல் பார்த்தவ ரெனவும் கேள்வியுறுகின்றோம். அங்ஙனமாயின் உலகத்தோ டொட்ட வொழுகாது இவர் ஜாதியாருக்குரிய செட்டியாரென்னும் பட்டத்தை விலக்கி ஐயாவென் றிட்டுக்கொண்ட தெதற்கேயோ? ஒருக்கால் அப்பெயரைக் கோயிலூர்மார்க்கஞ்சென்று பெற்றோமென்பராயின் சிதம்பரய்யா அவர்கள், குட்டையையா அவர்கள் முதலிய சாமர்த்தியசாலிகளே யவர்கள்பாற்பாடங்கேட்ட பல பிரபுக்களாகிய மாணாக்கர்கள் அன்புடன் ஐயாவென் றழைத்தமையால் அப்பெயர் பெற்றார்களென்பர். அஃதொப்ப இவரிடம் பாடங்கேட்ட சீடர்கள் யாவர்? அவ்வாறு பாடங்கேட்டவர் பெயர்வைத்திலரேல் எங்ஙன மிப்பெயரைப் பெற்றார்? இவரை நேரிலறியாதார் ஐயாவென் றழைக்கப்படுகிற வேறு ஒரு ஜாதியாரென்ன மதித்தல் கூடுமே? தத்தஞ்சாதி தெரிவித்தற்கே வைத்த குறியீட்டை இவர் மயங்குமாறு வைத்தது ஞாயமன்றே. அஃதே பட்டம் என்பராயின் அவ்வாறு நின்றும் சாதியாது வைசியமித்திரனில் எழுத வல்லாரென மதித்தற்கிடனாக அதி சமீபத்தில் வரைந்த இரண்டு விஷயங்களில் முத்துராமன் செட்டியார் எனக் கைச்சாத்திட்டிருக்கின்றனர். இப்பொழுதுதான் இயற்கைப்பெயர் பெற்றனர் போலும். இவர்சுயம்பாடிய செல்வவிநாயகர் துதியில் "செல்வ விநாயகன் பொற்பதமதனைப் போற்றுதல் செய்வாம்" என்றார். விநாயகருக்கு இரண்டு திருவடிகளே உள்ளன. ஒருவாறுயானையாக உருவகப்படுத்தினும் நான்குகால்கள் உள்ளன. அவ்வாறிருக்க அவர் திருவடிகளைப் பன்மைபட வெளிப்படையாகக் கூறிவிடு

னும் ஒருமைப் பன்மை படவுங் கூறுது மிகத்தெளிவாக ஒருமை
யேபட "பதமதனைப் போற்றுதல் செய்வாம்" என்றார். விநாயக
பெருமானை இவர் கவித்துவ சாமர்த்தியத்தால் தம்மட்டில் ஒருகா
ராக்கினர். இப்பெருமான் யானையாக வருணிக்கப்படுங்கால் ஒ
மை யுடையாராவர் அல்லாது ஒருகாலும் ஒருகாலரல்லர், இ
காலரே என்பதை உணர்வாராக. அதனேடமையாது தாம்கொண்
கிரியா குருதுதியிலும் "கோதிலா வணிகர் குலமது விளங்
கோமளமாகவே யருளும், நாதனுமையனடியினைப் பணிந்து நாமெ
றும் வணங்கி வாழ்த்திடுவோம்" என்றார். வணிகர் குலம் பலவிருப்
அதனையும் ஒரே ஒரு குலமாகக் குறுகக் கூறிவிட்டுப் பற்று
குறைக்குத் தாம் கொண்ட கிரியாகுருவையும் ஒற்றைக் காலரா
கினர். ஞானகுருதுதியில்விகிர்தகுருவாய் முத்து ராமலிங்கய்யனெ
மெய்யுடனெழுந்தருளியே" என்று கூறியுள்ளார். அதில்அரு
யே" என்ற வினையெச்சத்திற்கு முடிவில்லைபோலும். "பழனியப்
பூசணன்" என்றார். "பூசணன்" என்பது இலக்கணப்படிவடமொழி
யும் அன்று. தென்மொழியும் அன்று. வேறு என்மொழியோ? தெ
விப்பாராக. "வெள்ளைய பூபதி" என்றார். துறவிக்கு வேந்த
றரும்பு" என்றிருப்ப இவ்வெள்ளைய ஞானியாரை "பூபதியெ
றது என்னையோ? அரச வமிசத்தினராயினும் அவ்வாறு கூறுத
தகும். இவர் வணிகரெனத் தெரிகின்றது. "கொளண்ணமலை
என்று ஒரு ஞானியாரைக் குறித்தார். இஃது ஒருசொல்லோ இ
சொல்லோ? ஒரு சொல்லாயின் அப்பெயர் உலக இயற்கைக்கு மா
படுமன்றோ? இரு சொல்லாயின் இன்னதைக் கொண்ட அண்
மலை என்பதற்கு மேலே இணைக்கும் சொல் ஒன்றுமில்லை. "கொ
என்னும் ஒரு பொருளைக் கொண்ட அண்ணமலை என்று பொரு
படுகின்றதே? இதன் உண்மைப் பொருள்யாது? "இவர்கள் நி
பதம் இறைஞ்சுவோமே" என்று பாடலை முடித்தார். பதத்தி
நிகழ்ச்சி என்ன வேண்டியது! விசாலமான தமிழ்க் கடலில் ப
திற்கேற்ற அடைமொழி ஒன்று இவருக்குக் கிட்டாதது வியப்

இறந்தகாலத்துள்ளாரையும் மடாதிபதிகள் அல்லாதாரை
துதிக்கப் புகுந்த இவர் நிகழ் காலத்தில் கோயிலூரில் இவர் கொ
கைப்படி ஞானகுருவாயிருக்கின்ற ஸ்ரீ அண்ணமலைச் சுவாமி

ஏன் துதிக்காது விடுத்தார்? ஞானகுரு என்பார் கோயிலூர் சுவாமிகள் என்றெழுதுகின்றார். இவரெழுத்துப்படி முத்துராமலிங்கசுவாமிகள் முதல் வீரப்பசுவாமிகள் வரை கூறிய எல்லாருமே கோயிலூர் மடாதிபத்தியம் பெற்றவர்களென்று ஆகின்றதே? முத்துராமலிங்கஸ்வாமிகள், துறவுஸ்வாமிகள் சிதம்பரய்யா அவர்கள், ராமசாமிஸ்வாமிகள், வீரப்பஸ்வாமிகள், இவ் வைவருமே இவர் குறித்தபடி கோயிலூர் மடாதிபத்தியம் பெற்று ஞானகுருவாய் இருந்தவர்கள் என்று பரிஷ்காரமாகத்தெரிகின்றது. பழனியப்பபூசணன், முத்துவீரப்பன், வெள்ளையபூபதி, கொளண்ணாமலை, குட்டையப்பன், நாகப்பன், பொன்னம்பலசாமி இவ்வெழுவரும் இவர் குறித்தபடி கோயிலூர்ஸ்வாமிகளா? என்பதை விவரிப்பாராக.

அச்சிறிய புத்தகத்தில், முதலில் விநாயகர் துதியும், அதன்பின் கிரியாகுரு துதியும், அதன்பின் ஞானகுரு துதியுமாத்திரஞ் செய்திருத்தலால் அது செய்தவர் கருத்து நோக்கி, நிரனிரையாகக் கொள்ளுங்கால், விநாயகருக்குத்தலைமையும், அதற்கு அடுத்ததரம் கிரியாகுருவுக்கும், அதற்கடுத்ததரம் ஞானகுருவுக்குமாகிறது. எதிர்நிரனிரையாகக் கொள்ளுங்கால் தலைமை ஞானகுருவுக்கும், அடுத்ததரம் கிரியா குருவுக்கும், அடுத்ததரம் விநாயகருக்குமாகிறது. விநாயகருக்குத்தலைமையின்மைகூறுதற்கு எவருமிசையாராதலால், இவர் கருத்துமுறை நிரனிரையென்பதே துணிவு. இதனால் கிரியாகுருவின் தரத்துக்கு ஞானகுருவின் தரம் குறைவாகிறது. இங்ஙனமாகவும், இவர் பின்காட்டுகின்ற சில விளக்கத்தால், ஞானகுருவுக்கு மேன்மை தெரிகிறது; பொதுவாகக் கிரியாகுருவைக்காட்டிலும், ஞானகுரு மேன்மையுடையாரென்பது சர்வசனசம்மதமே. அப்படியும் நிலைத்து நில்லாமல், இவர் குறித்தபடி கிரியாகுருவாகிய பாதரக்குடிச்சுவாமிகளை, ஞானகுருவாகிய முத்துராமலிங்கசுவாமிகள் பாடினதாக ஒரு பாடலுங் காட்டுகின்றனர். இதனால் இவர் எழுதுவது பூர்வாபர விரோதமென்பது விளங்கக்கிடக்கின்றது. இவர் கிரியாகுருவென்று கொள்ளப்பெற்றவர்க்கு குலங்கோத்திராதி தெரிவித்திலர்.

பின் ஞானகுருவுக்குப் பெயர்காட்டின கருத்தென்னையோ? அதுவும் முதலில் ஞானகுரு என்று ஒருமையிற் கூறி, கவியில்

முத்துராமலிங்கப்ப னென்பது முதல் வரிசையாகப் பன்னிரண்டு பெயர்கள் பன்மையிற் காட்டினார். இவர் கொண்டபடி அந்த ஞான குருவின் மதமோ நாம ரூபாதிகளைக் கடந்து பிரபஞ்சாதிதர்களாய் நிற்றல். இதனை, அவர்கள் நாமரூபாதிகள் மித்தையென்றே பிறர்க்கு முபதேசித்தலாலுந் தெளியலாம். நாம ரூபாதிகளைக் கடந்தோர்க்கு நாம ரூபங்கூறினர். இவர் கருத்தின்படி நாம ரூபாதிகளைக் கடந்திடாத கிரியா குருவுக்கு நாமரூபங் கூறுமொழிந்தனர். இத னாலும் இவர் எழுத்தின் பெருமை இனிது விளங்கும். புராதனத் தைத விலக்கத்துணிந்து, நூதனத்தை மேற்கொண்டதனாலன்றோ! இன்ன ஆதினம் இன்ன பேரொன்று இவர் கவியில்காட்டுதற்கு மிய லாது நின்றனர்.

இனி இவர்காட்டிய ஞானகுரு பரம்பரையில், பிரதமாசாரிய சுவாமிகளாகிய முத்துராமலிங்க சுவாமிகளும், அவர்களுக்குப் பின் பிரபஞ்ச வைராக்கிய சதாசார ஞானசம்பந்த சீலர்களாகிய துறவு சாமிகளுமாகிய இருவர் காலங்களுக்குப் பின், அங்கு வந்த முருக தாசர் என்பார் ஓர் ஞானிக் கவிகூறியுள்ளாரெனக் கேட்டுள் ளேம். அவர்களெல்லாம் ஞானிகள்; அவர்களைக் கர்மபலங்கள் வாதிக்கமாட்டா என்பர் போலும். அப்படியானால் சர்வே ந்தத வேதாகமப்பிரதிபாத்திய பரமாசாரியராகிய தக்ஷிணா மூர் த்தி, முன்னர் வேத வேதாந்த போதனை செய்துந் தெளியா சனகாதிகளுக்குப்பின்னர்ச்சித்தாந் தோபதேசஞ்செய்து, ஆட்டுவா ரூடிக்காட்டுதல் போலத்தானும் உத்தமோத்தம சிவஞான யோகி போலிருந்தே மௌன முத்திரை காட்டியமர்ந்ததும் வீண் செயல் தான் போலும் .சனகர் முதலியோர் வேதவேதாந்த போதனையாற் றெளிந்திலரென்பதை, கந்தபுராணம் மேருப்படலம் "இருட்பெருங் கடலின் யாமத் தெறி மருத் திடைப் பட்டாங்குப், பொருட்பெருங் கடலாம் வேதம் புடைதொறு மலைப்ப விந்நா, ளருட்பெருங்கடலே பெய்த்தே மமைந்தில துணர்வியாங்கண், மருட்பெருங் கடலி னீங்கும் வண்ண மொன் றருடி யென்றார்" என்ற கவியாலும், பின்பு சுத்தாத்துவித சைவசித்தாந் தோபதேசஞ் செய்தாரென்பதை "மூ துறை சனக னாதி முனிவரர் தொழுது கேட்ப, வந்தமி லாகமத்தி னரும்பத மூன்றுங் கூற," என்ற கவியாலும், மௌன முத்திரைகாட்டி

யோகி போலமர்ந்தாரென்பதை "ஊரத்திற்சீர்கொள், கரதலமொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி, யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றுன்" என்ற கவியாலும் நன்குதெரிய லாம். விரிப்பானேன்.

இனி இவர், தனவைசியர்கள் வைதிகசைவர்களாதலால் வைதி கத்துக்குக் கோயிலூர்ச்சுவாமிகளும், சைவத்துக்குப் பாதரக்குடிச் சுவாமிகளுங் குருவாவரென்கிறார். ஆகவே, வைதிகசுவாமிகளிட த்தில் சைவமில்லை: சைவசுவாமிகளிடத்தில் வைதிகமில்லை என்றாகி ன்றது. பின்பு மேலதிகாரிகளுக்கு இரண்டும் ஒருபக்ஷமாகுமென் கிறார். அப்படியானால் வைதிகத்துக்கென்றும் சைவத்துக்கென்றும் பிரித்த தென்னையோ? இவரே, தனவைசியர்கள் வைதிகசைவர்க ளென்று பிரிப்பின்றி எழுதியதை அடுத்தநிமிஷமே மறந்தனர். வேதாந்தமாகிய வைதிகத்தின் றெளிவே சைவசித்தாந்தமென்பதை, ஸ்ரீமந் நடேசப் பெருமானுல் புகழப்பெற்ற ஸ்ரீ உமாபதி சிவத்தின் திருவாக்காகிய,

"புறச்சமயத்தவர்க் கிருளாயகச்சமயத்தொளியாய்ப் புகழளவை க்களவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பிலதாயிருள்வெளிபோ ற்பேதமுஞ்சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன,வறத்திறனுல் விளைவதாயுடலுயிர்கண்ணருக்கனறிவொளி போற் பிறிவருமத் துவிதமாகுஞ்,சிறப்பினதாய்வேதாந்தத் தெளிவா ஞ்சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" என்ற பிரபல சுருதிகொண்டு உணர்வாராக.

இனி "தனவைசியர்கள் முதலாவது பாதரக்குடிச்சுவாமிகளிடத் தில் சிவதீக்ஷையும் பஞ்சாக்ஷர உபதேசமும் நாமமாத்திரமாய்க் கேட்டுக்கொண்ட பின், கோயிலூர்ச் சுவாமிகளிடம் ஞானசாஸ்தி ரம் படித்து ஞானோபதேசம் பெற்று வருவது வழக்கம். அங்ஙனம் நடைபெற்று வருவதுபோல சேது முதல் இமயபருவதம் வரையில் மற்ற ஜாதியாருக்கு மடமும் ஆசாரியரு மிவ்வளவு வைபவத்துட னிருப்பதாகப் புலப்படவில்லை" என்றெழுதுகிறார். லக்ஷக்கணக் காய் தென்னிந்தியாவிலெங்கணும் வியாபித்துள்ள சைவ, வைஷ் ணவ, ஸ்மார்த்த, மாத்வ மதஸ்தர்களுக்கு எண்ணில்லாத ஆசாரியர்

களும் அளவுகடந்த வைபவங்களைப் பொருந்திய எத்தனையோ பி தான மடங்களும் கிளைமடங்களும் இருக்கின்றன வென்பதைச் ச றும் உற்று நோக்காது எழுதியதற்கு யாம் என்னை கூறத்தக்க

மஹா ஸ்ரீமான்களாகிய சைவ வேளாளர்களுக்கு ஆசாரி ஸ்தானங்களாயுள்ள திருவாவடுதுறை, தர்மபுரம், மதுரை மு லிய அநேக ஆதீனங்களிருக்கின்றன. அவைகளுள் திரு வடுதுறை ஆதீனம் ஒன்றுக்கே வருடம் ஒன்றுக்கு சற்றேற குறைய ஆறு லக்ஷரூபா வரும்படி வரக்கூடிய பெரிய பெரிய கிர மங்களும், திருவாவடுதுறை, திருப்பெருந்துறை, திருவிடைமருது முதலிய பெரிய பெரிய அநேக தேவாலயங்களும் இருக்கின்றன.

ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானத்துடன் இருபொழுதிலும் பந்தி விருந்து உண்ணு நிற்கு மகேசுரர்கள் பல்லாயிரவர்.

இலக்கண இலக்கிய சைவசாஸ்திரங்களை முறைப்படி பாட கேட்பார் எண்ணிலாதார்.

ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் செம்பொன்மயமான தந்தச்சிவி யில் எழுந்தருளும் பொழுதெல்லாம் அத்தியற்புத விருதுகள் எடு பார் பற்பலர்.

பிரஸ்தாப திருவாவடுதுறை யாதீனுதிபதி ஸ்ரீலஸ்ரீ அம் வாண தேசிகரவர்கள் தங்களுடைய அருமைப்பொழுதை யெல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் பூசையிலும் திராவிடவேத கிய தேவார திருவாசக ஆராய்ச்சியிலும் சைவசாஸ்திர புராண படனங்களிலும் தேவாலய விசாரணைகளிலுமே செலவுசெய்கின் கள். அம்மடத்தின் பெருமையையும் அவ்வாசாரிய ரவர்களுடை வைபவத்தையும் எழுத இப்புத்தகம் இடம் போதாதென்றே இ மட்டோடு நிறுத்துகின்றோம்.

வைஷ்ணவ ஆதீனங்களில் அகோபிலமடம் மிக்கபேர்பெற்ற லக்ஷக்கணக்கான சொத்துக்களிருக்கின்றன.

ஸ்மார்த்தமடங்களில் தலைமையாயுள்ளது சிருங்கேரி ஆ சங்கராசாரியாரவர்கள் மடம். அம்மடத்திற்குச் சிஷ்யராயுள்ள

வைதிகத்திலும் ப்ரபலலௌகிக உத்தியோக தர்மங்களிலும் கியாதி பெற்ற உலகத்திலுள்ள ஸ்மார்த்த பிராமணர்களனைவரும், மிக்க கீர்த்தி பெற்ற மைசூர் மஹாராஜா முதலானபல அரசர்களுமேயாம். அவ்வாசாரிய மூர்த்திகளிடத்தில் வேதவேதாந்தாதி சாஸ்திரபாடங் கேட்கும் முற்றத்துறந்த சன்னியாசிகள் எத்தனையோ நூற்றுவர். அம்மடத்தின் பெருமையையும், ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர சாரதாம்பாபூஜா மகிமையையும், தினந்தவறாத ஆயிரக்கணக்கான பிராமண போஜனத்தின் சிறப்பையும், உலகம் ப்ரமிக்கும் பவனிக்கண் காக்ஷியையும், இன்னும் உள்ள எண்ணில்லாத வைபவங்களையும் ஒருவர் எழுதமுடியுமா?

மத்வமதஸ்தர்களுக்கு முதன்மையானது உத்தராதிமடம். எத்தனையோ கிளை மடங்களைப் பெற்றுள்ளது. பிராமணாதீனத்தில் ஆதிசங்கரர் மடத்துக்கு அடுத்த படியாயுள்ளது. இவைகளையெல்லாம் விரிக்கிற் பெருகும். சிறிதும் வேதாகமவரம்புகடவா தொழுகின்ற மேற்காட்டிய மடங்களின் பெருமை இவ்வாறிருப்ப மற்ற ஜாதியாருக்கு மடமும் ஆசாரியரும் இவ்வளவு வைபவத்துடனிருப்பதாகப் புலப்படவில்லையென்றெழுதியது வியப்பாய் முடியுமன்றோ?

கோயிலூர் மடத்துக்குப் பிரதமாசாரியர் முத்துராமலிங்க சுவாமிகளே. இவர்கள் அம்மடத்தைப் பிரதிஷ்டை செய்து சுமார் 85 வருஷங்கள் ஆகின்றன. பாதரக்குடியில் மடம்ஏற்பட்டதும் ஆசாரிய சுவாமிகள் உபதேசம் ஆரம்பித்ததும் 345 வருஷங்களுக்கு மேலாகின்றன. ஆகவே 85 வருஷங்களுக்கு முன் கோயிலூரிலே மடமில்லை. பின்புதான் மடம் ஏற்பட்டு வரவர விருத்தியாகிறது. இதனை அச்சரித்திர மூலமாகவும் நன்குதெரியலாம். இதனால் இவர், தனவைசியரெல்லாருமே தீக்ஷை கேட்டபின்பு, தவறாமற் கோயிலூர்ச் சுவாமிகளிடம் ஞானசாஸ்திரம் படித்து ஞானோபதேசம் பெற்றுவருவது வழக்கமென்றதைப் புத்திமான்கள் ஊகிப்பார்களாக.

இனி, "திருவாதவூரடிகளுக்கு, பரமசிவன், கயிலையினின்று திருப்பெருந்துறைக்கடியார்களோ டெழுந்தருளி அனுக்கிரகித்தது போல, தனவைசியர்களுக்குக் கயிலையிலிருந்து பரமசிவன்,

கோயிலூரில் முத்துராமலிங்க ஞானதேசிகராய் அவதாரமாகி, அனுக்கிரகம் பண்ணினதாகக் காணப்படுகிறது." என்று எழுதினர். இதில் காணப்படுகிறதாகிய செயப்பாட்டு வினைக்கு வினைமுதல் யெங்கு வைத்திருக்கின்றனரோ?

யாராயிருந்தாலும் தன்னாசிரியனைப் பரமசிவனாகப் பாவித்து துதிப்பது மரபாதலால், முத்துராமலிங்க சுவாமிகளைப் பரமசிவனென்று இவர் கூறியதில் எமக்கு ஆக்ஷேபமில்லை. இனி அந்தோ என்னென்று சொல்வது! ஸ்ரீமந் நடேசப் பெருமானே சிஷ்யபாவனை காட்டி, பணிமொழி கூறி "திருவாசகம்" எழுத அவர்க்கு அதனைத் திருவாய்மலர்ந்தருளிய பரமாசாரியராகிய ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஒப்பாகத்தனவைசியர்களைக்கூறிய இவர் எத்துணைத் துணிவுடையார் என்பதை அத்தனவைசியர்களே தெரிவார்களாக. ஆனால் இவர் யாருக்குமே திருவாதவூரடிகளை ஒப்பு கூறுவது வாய்ப்பழக்கம்போலும். இன்னுமிவர் "வணிகருக்கு வோஷதிகடமைப்பவுபதேசமழை மாருது பொழியுமுகிலே" என்பதற்கு, மேகமானது உவட்டு நிலம் நல்ல நிலமென்று நோக்காது மழை பொழிவது போலப் பாதரக்குடிச் சுவாமிகள் தனவைசியர்களுக்குப் பக்குவம் அபக்குவம் நோக்காது, உபதேச மழை பொழிந்ததாக ஓர் வியாக்கியானமுஞ் செய்தனர். இதனால், தனவைசியர்களில் அபக்குவருமுளரென்று ஒப்புக்கொண்ட இவரே தனவைசியர்களெல்லாருக்கும், மாணிக்கவாசகரை ஒப்பிட்ட பெருமையை என்னென்று கூறுவது!

இனி, "இப்போதிருக்கிற பாதரக்குடிச் சுவாமியவர்கள், அதப்படியில்லாது, நூலில் சொல்லுகிற ஆசாரத்தையும், மகத்துவத்தையும், யோக்கியதையையுங் கொஞ்சமும் உற்று நோக்காது" என்று எழுதினர். பாதரக்குடி ஸ்ரீ வேங்கடாசலபதி குருசுவாமிகள்,பாலியந் தொடுத்து, நிகழ்கின்ற (60) வயசுக்கு மேலும் உரிய காலங்கடோறும், ஸ்நானனுஷ்டான செப தப தியானதி சிவபூஜை தற்பரர்களாய், தங்களிடத்துபதேசம் பெற்ற சிஷ்யர்களாகிய சிலர் கோர்ட்டுக்கிழுத்தும், செய்த கஷ்ட நிஷ்டூர ஆபத்துக்காலங்களிலுங்கூட, ஒரு சிறிதுஞ் சலியாது, தங்கள் பூர்வ பரம்பரை

பாத்திய குலரத்ன க்ஷேம நிதியாகிய பழம்பதிநாத சிவபூஜையை; மேலும்மேலும் உள்ளக்கிளர்ச்சியுடன் செய்துவந்த வருகின்றவைதிக சைவசதாசார மஹாமகத்துவ பரம யோக்கியதை யுள்ளவர்களென்பது, யாவரும் நேரிற்கண்டுங் கேட்டுந் தெரிந்த தெரிகின்ற விஷயமே.

இது பர்வதாக்கிர தீபம்போலப் பிரசித்தமாயிருக்க, இவர் நூலில் சொல்லுகிற ஆசாரத்தையும், மகத்துவத்தையும், யோக்கியதையையும், கொஞ்சமும் உற்று நோக்கவில்லை யென்றுரே? அது எந்த நூலிற் சொல்லுகிற ஆசாரமகத்துவ யோக்கியதையோ வென்றாகிக்கக் கிடக்கின்றது.

இனிச் "சிலர்களிடத்தில், மனஸ்தாபத்தை உண்டுபண்ணிக்கொண்டு, கோர்ட்டில் வாதிபிரதிவாதிகளாக இருந்து, விவகாரம் பண்ணி வருவது யாது காரணமென்று மதிக்கக்கூடவில்லை" யென்கிறுர். சிவபூஜைப்பால்தடைப் பட்டதே! மனஸ்தாபத்திற்கு ஆரம்பமென்பது யாவரறியாதார்? அதன் பின் விரிந்தன பல. அவை விரிப்பிற் பெருகும். இதனுல் மனஸ்தாபத்தை உண்டுபண்ணினது யாரென்பதை, தெரிந்தாருணர்வர். அன்றியும் எத்தனையோ ஞாயஸ்தலங்களில் ஒவ்வொன்றும் ஸ்ரீ வேங்கடாசலபதி குருசுவாமிகள் பக்கமே ஞாயவழியென்று தீர்மானித்த நீதிபதிகளின் தீர்மானங்களே தெளிய விளக்கும்.

இனி இவர், ஆசாரியர்களுக்குவிதி (ஞானசோமனம்)" இந்த உலகம் புகழ்ந்தா லென்ன எல்லோருங் கூடி யிகழ்ந்தாலென்ன அறிவுதா னென்றிருந்தவர்க்கு அதிகங் குறைச்சலில்லை கண்டாய்" என்று நூல் கூறுகின்றது. மேகம்போன்ற தன்மையுள்ள சுவாமியாரவர்கள் இப்போது கால வேற்றுமையினுல், சீடர்களனைவரும் ஒன்று சேர்ந்து நாங்கள் தெரிந்து தெரியாது செய்தாலும் மன்னித்து அனுக்கிரகம் செய்யவேணுமென்று நமஸ்கரித்து நிற்க, சுவாமியாரவர்கள் தயவு செய்து அனுகூலமான வார்த்தை கூருது, விருத்தமான வார்த்தைகள் கூறினதுபற்றித் தெய்வத்தையே நோக வேண்டியதிருக்கிறது" என்கிறுர். இதில் எந்த ஆசாரியருடைய விதி கூறப்புகுந்தார். புகழ்தலும் இகழ்தலும் உலகத்தாரா? சீடரா?

நல்லது, இவர் எடுத்துக்காட்டிய உதாரணத்தில் ஆசாரியரைப் பற்றி ஒரு சொல்லேனுமுண்டா? சீடர்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டித்து நன்னெறிப் படுத்தவேண்டியது ஆசிரியர் கடமையென்றெந்த நூல்தான் கூறுது. சீடர்கள், ஆசிரியரைக் கிரிமினல் கேசிலிழுத்துத் தண்டிக்கலா மென்றெந்த நூலாயினுங் கூறுமா? சீடர்களனைவரும் ஒன்று சேர்ந்து க்ஷமை கேட்டு நமஸ்கரித்து நின்றதெப்போது? இவர்கள் கொண்ட நூதன குருஉபதேசகாலத்தில், மாமக்காரர்கள் தங்கள் சம்மதம் பெறாத, முன் வணங்கப்பெறாத, நூதனந் தானே யென்று சாமானியமாய் ஒதுக்காமல், நமது சடங்கை விடவேண்டாமென்று வழக்கப்படி மாமப்பணங்கொடுத்து வணங்கியிருப்பது தெரிந்தும், தங்கள் சடங்கை யிழந்தாலும் இழக்கின்றோ மென்றுறைத்து நின்றிவர்களால் முன்னெல்லாம் வணங்கி வரப்பெற்ற புராதன பரம்பரைக் குருசுவாமிகளை வணங்க வேண்டிய அத்தியாவசிய உபதேசகாலத்திலும், வணங்காதவர்களாயிருந்து, தஞ்சிறுவரையும் வணங்கவிடாத, இவர்கள் ஒன்று சேர்ந்து நமஸ்கரித்து வேண்டினார்க ளென்றெழுதியதை யாவரும் வியப்பார்கள். தெய்வத்தை நோவதேனோ?

இனி, "ஈசனுக்கிழைத்த குற்றந் தேசிக னெண்ணித்தீர்க்கும் தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்பதன்றிப், பேசுவதென்னோ தன்பாற் பிழைத்த காரணத்தால்வந்த, வாசவன் பழியுந் தீர்ப்பான் குரவனே வழியுங் கூற" என்ற கவியைப் பத்திரிகை மூலமாய்ச் சுவாமியவர்கள் பார்த்திருந்தும், நல்ல நோக்கங் கொள்ளாது விருத்தமாய்ப் பேசினதினால், பாடலின் விஷயம் இவர்களுக்கு உவமித்தது பொருந்தாது என்கிறார். எத்துணைச் சிறந்தோராயினும் ஆசாரியருக்கு யாதொரு குற்றமுஞ் செய்தலாகாது; ஒருவர் ஈசுரனுக்குச் செய்துவிட்டாலும், அதனை ஆசிரியர் தீர்த்து விடுவர். ஆசிரியருக்குச் செய்தால் அதனையவ்வாசிரியரே திருவுளமிரங்கித் தீர்த்தாலன்றி, ஈசுரனும் தீர்க்க முடியாதாதலால், மற்றெவரைக் காட்டிலும், அதிநாயகமாயிருந்து, ஆசிரியருக்கு எவ்விதத்தினும் அபசாரம் அபுத்தி பூர்வமாகவும் செய்யாமல், எக்காலத்தும் பாதுகாத்து வழிபாடு செய்துவர வேண்டியது, அத்தியாவசியகமென்பதை முக்கியமாய் விளக்கிப்பின் இந்திரனுக்கு வந்தபழி நீங்குதற்

வழி கூறினதை விளக்கினதே தவிர வேறில்லை: அப்படியன்று; இந்திரன் செய்த குற்றத்தைச் சிறிதும் நோக்காது நல்லநோக்கத்து டன் வந்த பழிதீரும் வழி கூறினதைத்தான்விளக்கின தென்பாரா கில் "வாசவன் பழியைத் தீர்ப்பான் குரவனை வழியுங்கூற" என்னும் அவ்வளவே போதியது. அம்மட்டிலமையாது மேல் மூன்று வரி மிகுத்துக் கூறிய கருத்து, மேற்கூறிய முக்கிய விளக்கங் காட்டுதற் கென்பதே திண்ணம். இக்கவிகொண்டு, சீடர்கள் எவ்வித குற் றஞ்செய்தாலும், ஆசிரியர் சிறிதும் நோக்காது, நல்ல நோக்கத்து டன், இதம்பேசி உபதேசிக்க வேண்டுமென்றிவர் கொள்ளுங் கரு த்து, பொருத்தமில்லை.

இந்திரன், வியாழபகவான் வந்தபோது, வழிபடாதிருந்ததே பெரும் பாதகமென்று தெரிந்து, பதைபதைப்புடன் அவ்வாசிரி யனை எங்கெங்குந் தேடிக் காணப்பெறாது, மிகவருந்தி, தான் மே ற்கொண்ட யாகாதி தேவகாரியங்கட்கு ஆசிரியன் வேண்டிய அத் தியாவசியம் நோக்கி, நூதனமா யொருகுருவைக்கொள்ளும் போ தும், புராதன குரு மூர்த்திகள் வெளிப்படும் வரையு மென்றே கொண்டான். அம்மட்டிற் கொண்ட நூதனத்தால் பெருங் கேடு தான் வந்தது: அது தெரிந்து அந்நூதன குருவைச் சிரச்சேதம் பண்ணினான். அதனால் தனக்கு வந்த கஷ்டத்தையும் நோக்காது, தீர் த்துக்கொண்டு மேலும் புராதன குருவைத் தேடினான். வழிபடாத அம்மட்டிலேயே வந்த பாதகப்பலனை, அனுபவிக்க வேண்டிய கால மேலு மிருத்தலால் புராதனாசாரியார் அகப்படாமல் வருந்தி விருத் திராசுரனைக்கொன்ற தோஷம் மிகவருத்தப்பயந்து, தாமரை நா ளுள் அணுரூபியாய் ஒளித்திருப்ப, அரசனின்றிச் சுவர்க்கம் வருந் துதல் நோக்கி இந்திரன் வழிபடாத பாதகபலானுபவ முடிவில், பு ராதன குருமூர்த்திவந்து பழிதீரும் வழி கூறினர் அவ்வழி அவன் செய்த பின்புதான் அவனை முன் போலச்சீடனாகக்கொண்டனுக்கிர கித்தனர்.

குருவை வழிபடாமையும், குற்றமாகுமென்பதை "தேசிகற் பணியானுஞ் சினமுறு, மர்சினனுமறையவர்க்கொன்றவர்" என்று சேதுபுராண சேது சருக்கம் (42)ம் செய்யுளாலுந் தெளியலாம்.

"ஆசிரியர்கள் விருத்தமாய் நடந்தால் சீடர்கள் விலகிக்கொள்வது சாஸ்திரத்தின் அபிப்பிராயம்" என்று எழுதி, இதற்குப்பிரமாணமாக ஸ்ரீ வேதாந்த தேசிக சூக்தியாகிய சங்கல்ப சூரியோதயத்தால், அப்போதே மறுத்தொதுக்கப் பட்டொளி மழுங்கிய பிரபோத சந்திரோதயக் கவியொன்று காட்டி, இக்கவியின் தாற்பரியப்படி சீடர்கள் சுவாமிகளிடத்தில் முரணுது, இதமான வழிபார்க்க வேண்டியதவசியம் என்று எழுதினர். அக்கவியிது: "குருவாசனன்றெ பிதாத்தம்முனெனக்கொளத்தகுமைங் குரவரேனும், பெருமிதங்கொண்டடுக்குமடா திதுவென்ப துணரமற் பிழைசெய்வாரேற், றருமநெறியுணர்ந்த மிக்கோரவரவர்க்குத் தக்க தக்க தண்டஞ்செய்தன், மருவுதிரைக்கடலுடுத்த மாநிலத்திற் பண்டைமறு வசனமன்றே"

இக்கவிக்கும், இதுபிரமாணமென்று முன்னும்பின்னுங் காட்டிய வசனத்துக்கும், ஏதேனும் பொருத்தமிருக்கிறதா என்பதைச் சற்றே கவனித்து, உண்மையுணர்ந்தோர் உண்மைகூறுக. இக்கவியும் விவேகன் சொன்னதா? என்பதுங் கவனிக்கத்தக்கது. முன் வசனம் விலகிக்கொள்வது சாஸ்திராபிப்பிராய மென்றெழுதி, குருவையுந் தண்டனைசெய்யலாமென்ற பாடலை எடுத்துக்காட்டினர். அதிலுள்ள "குரவரேனும்" என்பதிலுள்ள எதிர்மறை உம்மைக்குப் பொருள் யாதென்பதை இலக்கணம் வல்லபுத்திமான்கள் அறைவார்களாக. இனிஅக்கவியின்படியாவது குரவரைத் தண்டஞ்செய்வது சீடர்களா? தருமநெறியுணர்ந்த மிக்கோரா? பெருமிதங்கொண்டுக்கு மடாதிதுவென்ப துணராமற், பாதரக்குடிச் சுவாமிகள், ஆரம்பங்கொடுத்துத் தாமாக வலிந்து செய்தபிழை யின்னதென்று கூறுவாரா? ஷை சுவாமிகளிடத்தில் விரோதித்த காலந்தொடங்கி, அவர்களைச் சர்க்கார்மூலமாக வாதப்பிரதிவாதம் செய்தவர்கள், ஷை சுவாமிகளின் சீடர்களாகிய சிவரா? கவியிற் கண்டபடி தருமநெறியுணர்ந்த மிக்கோராகிய பிறரா? குற்றங் கண்டாலுங் குரவரைத் தண்டிக்க நினைத்தலாவது செய்வார்களா? இதனாலு மவரெழுதுவதுங் காட்டுங் கவியும் ஒன்றுக்கொன்று பொருந்தாதென்பதை யாவர் அறியாதார்?

"இதமான வழிபாராது சுவாமிகளிடத்தில் முரணுவது சுகப்படாதென்றெழுதி, உதாரணமாக, "கிரியைக் கிளைத்துவந்து கேட்டவர்க்குச் சும்மா, கிரியச்சுகம் விளைத்த சீமான்—குருவன்றிச், சற்றே பதைப்பைத் தரினுஞ் சுகம்படைக்கக், கற்றுனுங் காலனுமாங் காண்" என்றகவி காட்டினார். இவர் பாதரக்குடிச் சுவாமிகள் கிரியா குருவென்று முன் பலமுறை கூறினதெல்லாம் அடியோடு மறந்து ஞானகுரு விலக்கணங் கூறுங்கவி காட்டியது மிகவும் வியக்கத் தக்கதே.

இனி "சுருதிகுரு சுவாநுபவம் ஒத்திருக்கவேண்டும்" என்று ஓர் கவியுங்காட்டினார். இவர் கருத்தின்படி கிரியாகுரு விஷயத்துக்கு என்ன அவசியமோ? இருக்கட்டும். சீடர்கள் ஆசிரியரை நீக்கமுமன்று ஒத்திருப்பது? "கோயிலூரின்கண்ணே, பேற்கூறிய கவிகளின் சாரப்படி, சுருதிகுரு சுவாநுபவமும், ஜீவகாருண்யம் ஈசுவர பக்தி பாசவைராக்கியம் பிரமஞ்ஞாநம் சாதுசங்கமும், சாஸ்திர ஆராய்ச்சியும், க்ஷேத்திர மகிமையும், திருப்பணியழகும், மூர்த்திகள் தெரிசனமும், பாடகசாலை வித்தியாசாலை முதலான சகல வைபவங்களும், பொருந்தி தனவைசியர் முதலிய அடியார்கள் பாலுஞ்சோறும் உண்டு வேதாந்த பாடங்களைக் கேட்டுப் பேரானந்தத்தை அடைந்து சர்வசுதந்திர பாத்தியஸ்தராய் வருவதில்" என்றெழுதினர். இதுவும் இங்கு என்ன அவசியமோ? நல்லது. இதில், அநுபவம், காருண்யம், பக்தி, வைராக்கியம், ஞானம், சங்கம், ஆராய்ச்சி, தெரிசனம், பொருந்தின அடியார்களென்ற திருக்கட்டும்; க்ஷேத்திரமகிமை, திருப்பணியழகு, பாடகசாலை, வித்தியாசாலை, அடியார்களைப் பொருந்துவதெப்படி? மகிமை க்ஷேத்திரத்தையும், அழகு திருப்பணியையும், சாலைகள் ஸ்தலத்தையும் தான் பொருந்துமென்பது சிறுவர்க்குந் தெரிந்ததே. இதில் பாலுஞ் சோறும் உண்டு வேதாந்த பாடம் கேட்கும் வைபவத்தைச் சற்றே விசாரிப்பாம். வேதவேதாந்தாதி சாஸ்திர பாடங் கேட்டல் முதலிய தவநெறியினிற்போர், காமாதிகளுக்குப்பயந்து ஆகாராதிகளில் ஞாபகஞ்செலுத்தாதுகிடைத்தன புசித்துத் தமது நெறிக்கிடர்வாராது பாதுகாத்துக் கோடலே தொன்றுதொட்டு வந்தபெருவழக்கமும், சாஸ்திர சம்மதமுமாகும். இது சர்வசன சம்மதமுமேயாம். இதனை "மன்றுடையான் செஞ்

சடைமேல் வாளரவுக் குள்ளஞ்சி, என்றுமதி தேய்ந்தேயிருக்குப
னின்றுதவஞ், செப்புமுனி யேவார்காமத் தீப்பிணிக்கஞ் சித்தம
பொய்யுடலை வாட்டிமா போல்" என்ற சுருதியாலு மினிது கா
லாம். நெய்க்கு வேறாக, வேப்"பநெய்யைப் பந்தியிலிட்டகால
அதுவும் வித்தியாசந் தெரியாது யாவரும் புசிக்கும்போது ஒரு
வித்தியாசந் தெரிந்து "வேப் என்ற மட்டிலேயே உனக்குப் ப
வமில்லையென்று குருவால் விலக்கப்பட்ட கதையாலுந் தெளி
காணலாம்.

இத்தகைய உண்மை நூல்களின் கருத்து நோக்கியன்றோ
றவு சுவாமிகள், யாதொரு குறையுமின்றி நிறைந்த சகல சம்பத்
களையும் வெறுத்து, கோயிலூரில் வந்தும் அங்குள்ள ஐசுவரிய
ஆகாராதிகளாலும், தமது நிலைக்கு விரோதம் வருமோ வென்
சிச் சிதம்பரஞ்சென்று, அங்கும் எத்தனையோ அன்பர்கள், தாம்
க்குமிடம் வந்து வணங்கி ஆகாராதி உபசாரங்களை ஏற்றருளும்
வேண்டி நிற்பவும், அதுவும் விரோதமாகுமென்றே எண்ணி,
பிக்ஷா பாத்திரங் கொள்ளுதலு மிகையாமென்று நீத்துக் கரதல
பாத்திரமாகப் பிக்ஷை யேற்றுண்டு வந்தார்கள். பிக்ஷைக்கும்
றிடங்களிற் செல்லுதலொழிந்து கைக்கோளர் தெருவிற் சென்
ம் ஊகிப்பார்க்குண்மை விளங்கும். அவர்கள், பின் கோயிலூ
மடாதிபத்தியம் வகித்துச் சிலகாலமிருந்ததும், குருவாக்கிய
னஞ் செய்யமாட்டாமையே யன்றி வேறில்லையென்பது அங்
ளாரே சொல்வரெனக. இம்மட்டோ! இத்துறவு சுவாமிகளின்
னெறியையே மேற்கொண்ட பெரிய மாதேவ சுவாமிகளும், கோ
லூரில் பந்தியிலிருந் துண்கவென்று பலரும் வணங்கி வேண்ட
அவ்வாகாரங்களை வெறுத்துத் தனியிடத்திலிருந்து "உப்பின்
டபுற்கை யூணல்லது, மற்றோருண்டி வாய்விட் டாற்றினுங், கிட்
தாக" என்ற சுருதியைச் சிரமேற்கொண்டு தனித்திருக்கு மி
திற் கொண்டுவந்து வைக்கும், அன்னுதிகளில் அன்னத்தை அ
சத்து நீக்க நீர்விட்டுத் தேய்த்தலம்பி எடுத்துச் சாடராக்கினி
யுநிமித்தம், அல்பாகாரஞ்செய்து கொண்டு நிஷ்டாபரரா யிருந்
ளென்பதும் ஆண்டுள்ளார் சொல்லுவர்.

துறவென்பது சொன்மாத்திரையாக்கொண்டு, முப்போது மன்
னம் புசிக்கவுந் தூங்கவு மென்று பட்டினத்தடிகள் நிஷித்தமாகக்
கூறியபடி, ஆறு சுவை நால் வகையுணவுண்டு களிப்பதன் றென்ப
தையாவரறியாதார்? இனி யாதுகூறவேண்டும்? பிரபஞ்சப்பற்று
முற்றும் விட்ட மேற்கூறிய பெரியாராகிய இவர்களே, ஆகாராதிக
ளுக்கஞ்சி நின்று, கூழோ காடியோ நேர்ந்தது கொண்டு, உதராக்கி
னி சிறிது தணிப்பது நிமித்தமாய் உட்கொள்ளுவார்களானால், மற்
றையோர் பாலுஞ் சோறுமுண்டு பாடங்கேட்கும் வைபவத்தை
நாம் என்னென்று எடுத்துரைப்போம்! இவர் சொல்லுகின்றபடி
கோயிலூர் மடாதிபத்திய சர்வசுதந்திர பாத்தியதை, பட்டத்தி
லிருக்கின்ற சுவாமிகளுக்கென்பதே தான் கேள்வி. இவர், பாலுஞ்
சோறுமுண்டு வேதாந்த பாடங்கேட்பார்க்கெல்லாம் அது உண்
டென்று எழுதி, அச்சிட்டும் வெளியிட்டது, பிறருக்கும் பாத்திய
ஸ்திரம் பண்ணவோ?

இப்போது கொஞ்ச காலமாக வைசியர்கள் கோயிலூரில் படிப்பு
அதிகமில்லாதிருப்பதற்குக் காரணம், பாதரக்குடி சுவாமிகளிடத்தில்
உபதேசம்பெற்றுக்கொள்ளாது சுணங்கி யிருப்பதே காரணமென்று
எண்ணப்படுகிறது. உதாரணம் "காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி,
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது, வேதநான்கினு மெய்ப்பொ
ருளாவது, நாதனும நமச்சிவாயவே" என்று எழுதினார். சுணங்கியின்
பொருள் தான்யாதோ? ஆ! ஆ!! தென்னைமரத்தில் தேள்கொட்ட பனை
மரத்தில் நண்டைக்கட்டியதுபோன்றிருக்கின்றது. ஆனால் இவர்முன்
வழக்கமென்றெழுதியதைத் தாபிக்கநினைத்தனர் போலும். அப்படி
யானால் பாதரக்குடிச்சுவாமிகளிடம் உபதேசம் கேட்டால் தான்,
கோயிலூரில் படிக்கலாமென்றும் இவரே தாபிக்கின்றனர். முன்
னொன்று பின்னொன்று காரணங்காட்டினர். அஃதிருக்கட்டும்.
கோயிலூர்ப் படிப்புக்குப் பாதரக்குடி உபதேசங்காரண மென்றத
ற்கு, ஆதாரம் "காதலாகி" என்றதேவாரத்திலிருப்பதாகப்பார்த்தெடு
த்து வெளியிட்ட அருமையை என்னென்று கூறுவது? நிற்க.
"இப்போது விரோதம் பாராட்டி ருகிவற சுவாமிகளிடம் உபதேசம்
கேட்பதற்கு, முன் விரோதந்தவிரச் சாஸ்திர விரோதமுமிருக்கி
ன்றது; இரண்டு விரோதமிருப்பதால், சித்தம் வேறுபட்டிருக்கிற

சுவாமிகளிடம், உபதேசங் கேட்பது விரோதத்தை உண்டாக்கும், அதை நகரத்தார் கவனிக்கவேண்டும்'' என்று எழுதினர். விரோதம் பாராட்டிவருகிற சுவாமி என்றீரே? ஆரம்ப விளைவு முன் காட்டினேமாதலால் அது கொண்டு, விரோதம் விளைவித்து விருத்திசெய்கின்றவர்களின்னாரென்பதை பக்ஷபாத மின்றியுய்த் துணர்வாருணர்க. முன் விரோதந் தானிவ்வாறுபது. சாஸ்திர விரோதமிருக்கின்ற தென்றீரே? அது எந்த சாஸ்திரமோ? குருவைத் தண்டிக்கலாமென்று கூறும்பாடல் காட்டியசந்திரோதயந்தானோ? அது போன்ற பிறவோ? சந்திரோதயம் சூரியோதயத்தால் அடிபட்டொழிவதியல்பே. அது முன்னுங்காட்டினோம். ஆனால் இவர்கண்ட சாஸ்திரம், பரம்பரைக்குலகுருவை நீக்கிவேறு குருவைக்கிரகித்துக் கொள்ளும்படியே தான் கூறுகின்றது போலும். நல்லது, பிர்மபுத்திரராகிய காசிப மகரிஷியானவர், தமக்கு மாயாதேவியினிடம் பிறந்த சூரபத்மனாதியர், யாங்கள் நடக்கவேண்டிய நெறியைக் கட்டளை யிட்டருளுக வென்று பணிந்து கேட்டு நிற்கவும், தாம் சர்வசாஸ்திர பாரங்கதராயிருந்தும், உங்கள் குலகுருவாகிய சுக்கிராசாரியரை யடைந்து, அவருபதேசங்கேட்டு நடப்பீர்களாக வென்றனுப்பினார். இதனை "உன்னி யுள்ளத் துணர்வுறு காசிபன், றன்னின் வந்த தனயரை நோக்கியே, முன்னை நங்கண் முதற்குரு பார்க்கவ, னன்ன வன்க ணடைகுதி ரன்பினீர். "அடைதிரேயெனி னன்ன வனுங்களுக்,கிடையறுவகை யித்திருமல்குற,நடைகொள்புந்தி நவின்றிடு நன்றெனா,விடைபுரிந்துவிடுத்தனன் மேலையோன்'' என்ற கந்தபுராணக் கவிகளாலும் காணலாம். அசுரகுருவாயிருந்தும், அவரே நன்மையெல்லாஞ் செய்வாரென்று தம்புத்திரர்களை அனுப்பினது, பரம்பரைக்குல குருவை விடக்கூடாதென்பதை நன்கு விளக்குமேல், சீடர்கள் தங்கள் குலகுருவினிடம் உபதேசங் கேட்பது சாஸ்திர விரோதமென்றெழுதியது என்னபலன் பெறும்?

இனி "இரண்டுவிரோத மிருப்பதால், சித்தம் வேறுபட்டிருக்கிற சுவாமிகளிடம் உபதேசங்கேட்பது, விரோதத்தையுண்டாக்கும் நகரத்தார்கள் கவனிக்கவேண்டு''மென்று எழுதி அதற்குகாரணமக 'கைதவக்குரவன் மாயம்'' என்பதாதி நான்கு பாடல் காட்டி

ணர். இவர் கவனிக்கவேண்டுமென்ற கருத்து புராதன குலகுருவை நீக்கிவிட்டு, வேறு குருவைக் கொள்ளவேண்டுமென்றதே. இதனை இந்திரன் வேறு குருவைக்கொண்ட பாடல்கள் காட்டினதாலுந் தெரியலாம். வேறு குருக்கோடற் கிவை சாதகமென்றிவர் எடுத்துக்காட்டிய பாடல்களிவர் கருத்துக்குப் பாதகமேயானதை யறிந்திலர். அந்நான்கு பாடல்களின் கருத்து, இந்திரன் குலகுருவை எங்குந்தேடிக் காணப்பெறாது, அத்தியாவசியம் நோக்கிக் கிரகித்துக்கொண்ட நூதன குருவைச் சிரச்சேதம் பண்ணி, அதனால் வந்த தோஷத்தை மரம், மண், மங்கையர், நீரிற் சேர்த்துவிட்டுத் தான், அத்தோஷத்தினின்று நீங்கினனென்பதே. புராதனகுல குருவை நீக்கிவிட்டு நூதனமே அவசியமென்றெண்ணி யெழுதியவர் நூதன குருவைச் சிரச்சேதம் பண்ணினபாடல்களையே உதாரணமாக் காட்டியது பெரும் வியப்பே.

சிலர் வீழியர் சோழியரென்று விவகரிப்பது பொருந்ாதென்கிறார். ஆதியிற் காசியிற்போயிருந்து வந்த குலகுருசுவாமிகள், வைசியர்களை, நோக்கி, "நீங்கள், நமது வரவு தாமதித்ததனால், இப்போது உபதேசங் கேட்ட குரு பரம்பரையிலேயே, உங்கள் பரம்பரையாரெல்லாரும், உபதேசங் கேட்டுக்கொள்ளுங்கள்" என்பதாகப் புராதன லிகிதத்திருந்ததை வித்துவான் சிங்கயச்செட்டியாரவர்கள் அச்சிட்டுப் பிரசித்தம் செய்திருக்கிறார்கள்.

காசிக்குப் போயிருந்து வந்த குருசுவாமிகள் வாக்கின்படியே, அதுமுதலிதுவரையும் வைசியர்களுக்குக் குலகுருசுவாமிகள், வீழியர் மரபிலேயே ஏற்பட்டு வருவதும், பிரசித்தமே. நாளுக்குநாள் அபிவிருத்தியாகி வருகிறதும் பிரசித்தமே.

இனி "பிராமணராஞற் சரி, வீழியர் சோழியரென்று வகுப்பை நோக்கவேண்டியதில்லை" யென்கிறார். ஆனால் இவர் முன்கூறியபடி வைதிக சைவர்களாகிய வைசியர்களுக்கு, வைஷ்ணவர் மாத்துவர் முதலிய பிராமணர்களும் குருவாகலா மென்பர்போலும்; சூரிய வம்சத்தர்களாகிய ஸ்ரீ ராமன் முதலியோர், தமக்கு வான்மீகி முதலியோர் அத்தியந்தோபகார ஆப்தர்களா யிருக்கவும் குலகுருவாகிய வசிட்டரையே பரம்பரையாக மேற்கொண்டு வந்ததும் பொ

ருந்தாரென்பர்போலும். நாட்டுக்கோட்டை நகரவைசியர்கள் பஞ்சா க்ஷரோபதேசஞ் செய்தற்கு உரியார் பரார்த்த சிவபூசையுடையாரே யெனத்தேறி ஆதி பஞ்சாக்ஷரபுரமாகிய திருவீழிமிழலையிலிருந்த வீழியந்தணர்மரபில் வந்த ஸ்ரீமத் இராமநாதசுவாமிகளைக் குருவாகக் கொண்டிருக்கின்றனர். பின்வந்தாரும் அதனையே கடைப்பிடித்து அக்குலத்தாரையே குருவாகக்கொண்டு வந்திருக்கின்றனர். வீழியந் தண ரதுபெருமையை

"எறிந்தசண்டி யிடந்தகண்ணப்ப னேத்துபத்தர்கட்கேற்றநல்கினீர்
செறிந்தபூம்பொழிற் றேன்றுளிவீசுந் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தநாடொறு நேசத்தாலுமைப் பூசிக்குமிடம்
அறிந்துவீழி கொண்டீ ரடியேற்கு மருளுதிரே."

"பணிந்த பார்த்தன் பகீரதன் பலபத்தர் சித்தர்க்குப் பண்டுநல்கினீர்
திணிந்த மாடந் தொறுஞ்செல்வமல்கு திருமிழலை
தணிந்த வந்தணர் சந்திநாடொறு மந்திவா ணிடுபூச் சிறப்பவை
அணிந்து வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே."

எனவரும் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரத் திருப்பாசுரங் களானும்,

"எண்ணில் பல்கோடி சேவடிமுடிக ளெண்ணில்பல்கோடி திண் டோள்கள், எண்ணில் பல்கோடி திருவுருநாம மேர்கொண் முக்கண் முக மியல்பும், எண்ணில் பல்கோடி யெல்லைக்கப்பாலாய் நின்றைஞ் ஞூற் றந்தணரேத்தும், எண்ணில் பல்கோடி குணத்தரோர் வீழி யிவர்நம்மை யாளுடையாரே."

என்னும் சேந்தனார் திருவிசைப்பாத் திருப்பாசுரத்தானும் யா வரும் எளிதினறியலாம்.

இன்னுமிவர் நகரத்தார்க்குக் கிரியாகுருமடம் பாதரக்குடியெ ன்றும், ஞான குருமடம் கோயிலூரென்றும் கூறுகின்றார். "கோ தில் ஞானசரிதராம் நற்றவர்க்கு மொன்று சாதி நன்மை தீமையில் லையே" என்ற பாரத தாற்பரியப்படி ஞானாதீனமாகிய கோயிலூர் மடத்திற்கு நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிப்பிள்ளைகளிலேயே மடாதிபதிகளை நேமிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கின்றதே. வேறு

சில செட்டி ஜாதிகளிற் பிறந்தாரும் வேறு ஜாதியாரும் வேதாந்த வுணர்ச்சி மிக்குடையராயினும் இந்த ஞானதீனத்தில் நியமிக்கப் பெறுமையேனோ?

இவர் கூற்றின்படி பாதரக்குடியாகிய கிரியா குரு மடத்துக்கு மட்டும் பதினொரு பட்டமாக மாறுது வருகின்ற வீழியக்தணர் மரபை மாற்றி வேறு மரபில் நியமிக்கவேண்டிய அவசியம் யாதோ?

நமது சுவாமிகளுக்கு அனுக்கிரகம் புரியாநின்ற சிதம்பரம் அகோரசிவாசாரியர் மடத்துச் சுவாமிகள் சோழியரென்கிறார். சிவாசாரியரென்பவ ரின்னஜாதியாரென்பதைத் தெரிந்துகொள்ள வில்லைபோலும்.

ஈசானசிவாசாரியர், தற்புருஷசிவாசாரியர், அகோரசிவாசாரியர், வாமதேவசிவாசாரியர், சத்தியோஜாதசிவாசாரியர், திரிலோசனசிவாசாரியர், நீலகண்டசிவாசாரியர் முதலிய சிவாசாரியர்கள் சிவத்துவிஜர்களே என்பதை, அவர்கள் நூல்முகமாகவும் தெரியலாம். ஆகவே சிதம்பரம் மடத்து அகோரசிவாசாரியர் சிவத்துவிஜரே. அதாவது குருத்துவ உத்தம பாத்தியதை நோக்கி இக்காலத்தும் ரூடியாக வழங்கப் பெறுகிற குருக்கள் ஜாதியே. இந்தப் பாம்பரையிலுள்ள சிதம்பரம் மடத்தில், பிற்காலத்தில் ஒரு சிவாசாரியர் காலஞ்சென்றபின், அவர்க்குச் சந்ததி யில்லாமையாலோ, அவர்க்கு அணுக்கர்களாயிருந்த பிராமணுதிக்கத்தாலோ, அவரால் தீக்ஷிக்கப்பெற்ருே, பிராமணர்கள் அந்தஸ்தானத்துக்கு அதிபர்களானுர்களென்று ஊகித்தற் கிடனுகின்றது. இத்தனவைசியர்கள் சோழதேசத்தி லிருக்கும்போது, இவர்களுக்குக் குலகுரு, அகோரசிவாசாரியரே. இவர்கள் இத்தேசத்துக்கு வரும்போதும், அக்குலகுருவினு லிவர்களுக்குக் குருவாக நியமிக்கப்பெற்றவர் ஈசானசிவாசாரியர்; இவரே கலாமடத்தினதிபதி, பிரதமாசாரியர். இப்பரம்பரையினரே, காசிக்குப்போயிருந்து வந்தபின், பாதரக்குடி மடாதிபதி பிரதமாசாரியராகிய ஸ்ரீ இராமநாதசுவாமிகளைச் சுட்டிக்காட்டித் தனவைசியர்களை நோக்கி, "இவர் பரம்பரையிலேயே உங்கள் பரம்பரையினர் ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேசங் கேட்பீர்களாக" வென்று ஆஞ்ஞைதந்தருளின ரென்பது, புராதனலிகித சரித்திரத்தால் நன்கு தெரிந்த விஷயமேயாதலால் நாம் விரிப்பாமேனன்.

"அகோரசிவாசாரியர் மடத்துச் சுவாமிகள் வீழியராகவும் முத்தினபட்டத்துக்கு இருந்த சுவாமிகளில் சிலர்கள் வீழியராக வும் இருந்ததாக ஏற்படுவதினால், அதைப்பற்றிச் சொல்வதிற் பய னில்லை." என்று தாமெழுதியதை பொருவாறு முடிவுசெய்துவிட்டு 48-வது பக்கத்திலே, "16-வது பக்கத்தில் அகோரசிவாசாரியர் மடத்துச்சுவாமிகள் வீழியராகவும் மென்றிருப்பதைச் சோழிய ராகவுமென்று கொள்ளவேண்டியது" என்று குறித்துள்ளார். இது முழுமையும் உண்மைக்கு விரோதமென்பதை இத்துடன் சேர்க்கப் பெற்றிருக்கும் ஷை வம்சாவளியைப் பார்த்தவர் தெரிவார். ஸ்ரீமத் இராமநாதசுவாமி முதல் பதினொரு பட்டத்திலும் வீழியரே யன் றிச் சோழியர் ஒரு பேர்வழியாவ திருந்ததில்லை. இங்ஙன மாக வும் சில சுவாமிகளை சோழியரென்றவ ரினி யெதைத்தான் சொல் லாரென்பதை அறிஞர் ஊகிப்பாராக. முன் சோழியரிலொருவரிருந் ததாக இப்போது சிலர்கள் சொல்மாத்திரம் ஏற்பட்டதே தவிர வே றில்லை. இதனை இவர் மனமொளித்தாலும் வாக்கொளியாது வீழிய ராகவுமிருந்ததாக ஏற்படுவதினால் என்ற எதிர்காலச் சொல்லாலும் தெளியலாம்.

சற்குரு விளக்கப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சில வார்த் தைகளையும் வாக்கியங்களையும் காட்டுகிறோம். அவையாவன:— எரண்டு யேது. வேகார விருத்தம். விவறுபட்டிருக்கும். ரொம்ப நன்மையாயிருக்கும். அதார்க்கு. தலத்திர்க்கு. யேர்ப்பாடு. மடத்தி ர்க்கு. யெழுந்தருள. விசையமாகும்படி. யேர்பாடு, கூழு தார்க்கு. குடுக்கக்கூடும். கிடைத்திருக்கிர. பால்யத்திலேயே. இவைபோன்ற நூதன வார்த்தைகளும் வாக்கியங்களும் பற்பலவுள்ளன. இப்புத்த கத்தை யெழுதியவாகளின் கல்வித்திறமை மேற்குறித்தவற்றிலு ள்ள வழுக்களாலேயே யெளிது புலனாகும். அன்றியும், "நாம மாத்திரமாய்க் கேட்டு" என்றெழுதப்பட்டுள்ளது. இதில் ஆய் என்ற வினையெச்சத்துக்குக் கருத்தா காணப்படவில்லை. "வேதா கமங்களை யுணர்ந்து பசுபதிபாச இலக்கணந் தெரிந்தால் சைவர்கமெ ன்றாகும்" என்கிறார். திரிபதார்த்த உண்மையையும் சைவசாஸ் திரங்களையும் தெரிந்தவர்போல எழுதப்புகுந்து பதி பசு பாச என முறைப்படி யெழுதவறியாது பசுபதிபாச எனப் பிறழ வரைந்தனர்.

இவரெழுத்துப்படி பொருள் கொள்ளப்புகின் பசுபதியினது பாச மெனக் கொள்ளவேண்டிவருமே. பாசரஹிதராகிய பசுபதிக்கும் பாசமூட்டவந்த சாமர்த்தியம் மிகப்பெரிதே. "தனவைசிய வைதிக சைவானுஷ்டான விளக்க மென்னும் நூலில் சொல்லியிருக்கிறேன்" என்று தானெழுதிய புத்தகமொன்றையே சாக்ஷிகாட்டுகிறார். கற்ற வர்கள் யாதானு மொரு விஷயத்துக்கு உதாரணங் காட்டுமிடத்து ஆன்றோர் நூல்களைக் காட்டுவதே மரபாகும். இவர் தாமெழுதிய நூலையே தமக்கு ஆதாரமாகக் கொள்வதும் சொல்வதும் எழுதுவ தும் எவ்வளவு சிறப்படையு மென்று அறிஞரோ சிந்திப்பாராக. இவை யெல்லாம் அச்சுப்பிழை யென்பாராயின் "வீழியராகவும் என்றிருப்பதை சோழியராகவுமென்று கொள்ள வேண்டியது" எனப் பிழைதிருத்திக் காட்டியதுபோல் மேற்காட்டிய பிழைகட் கும் திருத்தமிட்டிருக்கலாமே? அங்ஙனம் திருத்தாமையாலே மேற் குறித்த பிழைகளெல்லாம் இவர்கள் சொந்தமேயன்றி அச்சிட்டவ ரைச் சேராவென்பது ஊகித்தறியக்கிடக்கின்றது. வாக்கியங்களைப் பிழையற எழுதிப்பழகுமுன் ஒருநூல் எழுதப்புகுதல் எவ்வளவு பெருமை பயக்குமென்பது சொல்லவும் வேண்டுமா! இன்னும் பல பிழைகளுள்ளன. அவற்றையெல்லாம் எழுதப்புகின் மணற்சோற் றில் கல்லைப் பொறுக்கிக் காட்டல்போலு மாதலின் விடுத்தாம்.

இவர் வசனமெழுதுந் திறமையை விளக்கினும். இவ்வாறே இவர் கவித்திறமையையும் சற்று ஆராய்வாம்.

சீருறும் பரீதாபி வருடமதி லாவணித் திங்களொன்றுந் தேதியிற்
பாருறுங் காரையம் பதிவந்து பரமேஸ்பர குருநாதனருளால்
ஏருறுந் தனவணிகருக்குமுயர் பஞ்சாக்கர மதையியற்றி யன்பாய்
தேருறும் வீதிவலம் வந்ததைச் சேடனும் செப்புதற் கெளிதாகுமே.

இக்கவியில் "பரமேஸ்பர" என்ற பிரயோகம் வியப்பைத் தருவதே. பரமேஸ்வர என்பதே மரபு. "வணிகருக்குமுயர்" என்று கூறியுள்ளார். வணிகருக்கும் என்பதிலுள்ள உம்மைக்குப் பொருள் யாதோ? "பஞ்சாக்கரமதை யியற்றி" என்று பாடியுள் ளார். பஞ்சாக்கரத்தை யியற்றுதல் உண்டோ? உபதேசித்து எனச் சொல்லாது இயற்றி யென்றது பொருந்துமாறு யாங்ஙனம்?

இதற்கு அடுத்துள்ள கவியிலும் "பரமேஸ்பர" என்றே கூறியு ளார். அன்றியும் "திருவோலக்க மானதுவை" என்று குற்றுகர தின்முன் உயிர் பொருந்தும் விதியறியாது முடித்துள்ளார். இல கிய இலக்கண நூல்களை முறையாகப் படித்தறியுமுன் கவிபாட புகுதல் இத்தகைய பிழைகளையே விளைக்குமென்பதை அறிவாரா

இனி "இன்பங்கிடைக்கவேண்டு மென்பதை யுன்னி தனவ சியர்களில் புத்திமான்களாயுள்ளவர்களொன்று சேர்ந்து மாயூர திற்குச்சென்று பரமேஸ்பர பாகவதரவர்களை எங்களுக்குக் குலகு வாக இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவர்கள் சரி ன்று ஒப்புக்கொண்டதன் பேரில் நூதன குருவாக ஏற்படுத் கொண்டதாக எழுதுகின்றார். இன்பங்கிடைக்கவேண்டு மெ தையுன்னி இவர்கள் வேண்டிக்கொண்ட நூதன குருசுவாமிக க்கும் இவர்கட்கும் ஏற்பட்ட உடன்படிக்கை தஸ்தாவேசு நக இதனடியில் காட்டுகிறோம். அதனைப்பார்த்தாலே குருவுக்கும் சி களுக்கும் இருக்கிற கருணையும் பக்தியும் நன்கு விளங்கும வின் அதைப்பற்றி நாம் விரிக்கவில்லை.

நூதன குருசிஷ்ய
உடன்படிக்கை தஸ்தாவேசு நகல்.

1911வரு மேமீ 27உக்கு விரோதிகிருதுவரு வைகாசி செவ பாதரக்குடிமடத்து நாட்டுக்கோட்டைநகரத்தாரவர்களுக்க டிரஸ்டிகளான காரியக்காரர்கள் இராமநாதபுரம் டிஸ்டிரிக்க தேவகோட்டை சப் ஸ்டிரிக்கட்டு கஸ்பா தேவகோட்டையிலி கும் வீர. ருமு. சிதம்பரஞ்செட்டியாரவர்கள் குமாரர் நாட்டுக் ட்டை செட்டி சாதி சிவமதம் லேவாதேவி முருகப்ப செட்டி 1 ஷை யூரிலிருக்கும் பழ. சு. அருணாசலஞ் செட்டியாரவர் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷைலேவாதேவி சபாபதி செ யார் 2. ஷை யூரிலிருக்கும் அரு. ருமு. வெ. அருணாசலஞ் செ யாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவாதேவி ணாசலஞ் செட்டியார் 3. ஷை யூரிலிருக்கும் மு. கு. பெரியக

பஞ் செட்டியாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவா தேவி குழந்தைவேலன் செட்டியாகிய முத்தைய்யா செட்டியார் 4. ஷை டிஸ்டிரிக்ட்டு திருப்பத்தூா சப் டிஸ்ரிக்ட்டு காரைக்குடியிலிருக்கும் சிவ. மெ. அரு. ராமசாமி செட்டியாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவாதேவி அருணசலஞ் செட்டியார் 5. ஷை யூரிலிருக்கும் மு நு. லெ. ராம. நாராயணன் செட்டியாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவாதேவி ராமசாமி செட்டியார் 6. ஷை டிஸ்டிரிக்ட்டு தேவகோட்டை சப் டிஸ்டிரிக்ட்டு கண்டனூரிலிருக்கும் மு. நா. நா. நாச்சியப்ப செட்டியாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவாதேவி நாச்சியப்பசெட்டியார் 7. ஷை யூரிலிருக்கும் கு. மு. உ. ராம சாமி செட்டியாரவர்கள் குமாரர் ஷை சாதி ஷை மதம் ஷை லேவாதேவி உலகப்பசெட்டியார் 8. இந்த எட்டுப்பேர்களுக்கும்

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மாயவரம் சப் டிஸ்டிரிக்ட்டு கஸ்பா மாயவரம் மகாதானபுரம் அக்கிரகாரத்திலிருக்கும் சாமிநாத பாகவதரவர்கள் குமாரர் பிராமணசாதி சிவமதம் 22 வயதுள்ள பரமேஸ்வரய்யர் யெழுதிக்கொடுத்த யெக்ரிமெண்டு. தங்களைச்சேர்ந்த பாதரக்குடி மடத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு பஞ்சாக்ஷர உபதேசம் செய்து வைக்கவும் ஸ்ரீ பெரியநாயகி சமேத பழம்பதிநாத சுவாமிக்கு நித்தியப்படிக்கு பூசைசெய்து வரவும் நம்மை குருஸ்தானமாக இருக்கவேணு மென்று தாங்கள் கேட்டுக்கொண்டு அடியில் கண்ட கண்டிஷன்களின்படி நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். தங்களுக்கு இஷ்டமான ஊரில் தாங்கள் கட்டி வைக்கிற மடத்தில் நாமிருந்து தினம் தோறும் ஸ்ரீ பழம்பதிநாத சுவாமிக்கும் பூசை நாம் செய்து வருவதற்காகவும் ஷை பூசை நிவேத்தியம் திருவிளக்குக்காகவும் பரிசாரகர்கள் வேலைக்காரர்கள் சம்பளத்திற்காகவும் நம்முடைய போசனம் முதலிய சிலவுக்காகவும் மீ க-க்கு ரூ ௱-ரூபாய் நூறு வீதம் தங்களுடைய உத்தியோகஸ்தர்கள் மூலம் அந்தந்தமீ கடையில் வாங்கிக்கொண்டு ரசீது கொடுத்து வருவோமாகவும். வைதீகத்துக்கு வாத்தியார் ஒருவரையும் ஆகமத்துக்கு வாத்தியார் ஒருவரையும் சேவகவேலைக்காகத் தவசிகள் இரண்டுபேரையும் தங்களுடைய சிலவின் பேரில் எப்

போதும் வைத்துவரவேண்டியது. நகரத்தார்கள் எல்லாக்காரிய காரர்கள் சொல்லுகிறபடி நாம் திருமுகம் கொடுத்து நாம் உபதே சம் செய்து வைக்கிறதற்கு புள்ளி ஒன்றுக்கு குரு தெட்சணைக்கா ரூ ௩. மூனு ரூபாய் மட்டும் நாம் பெற்றுக்கொள்ளுகிறது. அவ களால் சாமான்கள் இனமாகக் கொடுத்தால் மட்டும் பெற்றுக்கொ ள்ளுகிறது. நாம் எப்போதும் நைட்டிக பிரமசாரி ஆசிரமத்தி ருந்து அதற்கு நித்திய கரும அனுஷ்டான ஒழுக்க முதலிய வை கத்துடனிருந்து மேல்க்கண்டபடி உபதேசம் செய்து வருவே மாகவும். நமக்குப் பின்பு மேல்க்கண்டபடி குரு ஸ்தானமாக நி மிக்கவேண்டியதும் நமக்குச்சம்பந்தமன்னியில் தங்கள் இஷ்ட போல் நியமித்துக்கொள்ளவேண்டியது. தங்களைச் சேர்ந்த நா டுக்கோட்டை நகரத்தார்களில் விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை செ ய்துகொள்ளவும் பூசை யெழுந்தருளப் பண்ணிக்கொள்ளவும் வி ம்புகிறவர்களுக்குச் செய்து வைத்து அவர்கள் கொடுக்கிற குருதெ க்ஷணையைவாங்கிக்கொள்வோமாகவும். மேல்கண்டபடி ஒழுக் த்திலாவது ஆசாரமுதலிய நடத்தையிலாவது மேல்க்கண்ட கண் ஷன்களுக்கு விரோதமாயாவது நாம் நடந்ததாக ஷை நகரத் காரியக்காரர்கள் எல்லாரும் ஒரே மனசாய்த்தோன்றினால் நம்ம பின் துயர்ச்சி அன்னியில் விலக்கி வேறு ஒருவரை நியமித்துக்கொ ள்ளத் தங்களுக்கு பாத்திய முண்டென்பதை நாம் சம்மதித்து ந்த யெக்கிரிமெண்டு யெழுதிக்கொடுத்திருக்கிறோம். ஷை பாத குடி மடத்துக்கு இதுவரையில் யேற்பட்டிருக்கும் ஸ்தாபர சங் சொத்துக்களிலாவது இனிமேல் தங்களால் வாங்குவதிலாவது ந க்கு யெவ்விதமான பாத்தியமும் கிடையாது. ஷை மடத்துச்சொ த்துக்களை நகரத்தார்களுக்காக மானேஜ் பண்ணும் டிரஸ்டி பாத் யம் தங்களது யென்றும் இதின் மூலமாய் ஒப்புக்கொண்டிருக் றேன். எனக்கும் இந்த தஸ்தாவேசுமூலமாய் தாங்கள் புதித யேற்படுத்தியிருக்கும் பாத்தியம் தவிர வேறு யெவ்வித பாத் மும் நகரத்தார்களுக்காகத் தங்களைச்சேர்ந்தது.

பரமேஸ்வரய்யர்.

சாக்ஷிகள்.

சாமிநாதபாகவதர் அகிலாண்டய்யர் குமாரர், மாயவரம்.

சாமிநாத பாகவதரவர்கள் குமாரன் சம்பந்தமூர்த்தி அய்யர், மாயவரம்.

மூப. முத்தய்யாசெட்டி, தேவகோட்டை.

மூரு. லெ. நா. சோமசுந்தரஞ்செட்டி, காரைக்குடி.

திருமருகலிலிருந்து வந்திருக்கும் மா. அ. திருப்பணி அண்ணாச்சாமிபிள்ளை.

அறிவேன் நெட்டெழுத்து மாயவரம் பட்டமங்கலத்தெரு சுப்பய்பர் குமாரன், ருமப்யர்.

15 ரூ ஸ்டாம்பு 1—நிம்பர் 158

1 ரூ ஸ்டாம்பு 1—நிம்பர் 159

1911ஸ்ரீ மேமீ உ௬கஉ பரமேஸ்வர அய்யர், மாயவரம்.

இதனால் குரு சிஷ்யசம்பந்தம் எவ்வளவு பக்திசிரத்தையுடன் ஏற்பட்டிருக்கிறதென்பதைப் புத்திமான்களே அறியக்கடவர். இன்பங்கிடைக்கவேண்டி ஆசிரியரைத்தேடி அடைந்துகொள்ளு முறை இதுதான் போலும். இது நிற்க.

இனியேனும் புராதன குலகுருவையே என்றும்போல அடுத்து வணங்கி, சிவாகம விதிப்படி ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேசம் பெற்று, புத்திரமித்திர களத்திராதி நிறை சம்பத்துடன் நீடூழி வாழ்ந்து பரப்பிராப்தியும் பெற்றுய்யும்படி, ஸ்கந்தகணேசாதி புத்திரமித்திர நித்தியமங்கல பெரிய நாயகி களத்திர சகித மஹைதைஸ்வரிய மகெளதாரிய மகாப்பிரபுவாகிய ஸ்ரீ புராதன புரீசர் உபய சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேம்.

சுபம்; சுபம்!! சுபம்!!!

புராதனகுலகுருபாதமேதுணை.

திருவீழிமிழலே ஸ்ரீவீழிநாதசுவாமி பூஜகர்களும் திருப்புனல் வாசல் முதன்மையார்களுமான பாதரக்குடி மடாதிபதிகளின் வம் சாவளி:

சாலியவாகன சகாப்தம் ௲௪௱௮௰௭ கலியுகாப்தம் ௪௲௬௱௬௰ க்குச் செல்லாநின்ற அக்ஷய௵ அதாவது இங்கிலீஷ்௵ 1566-

முதலாவது ஸ்ரீமத் இராமநாதசுவாமியாரவர்கள் ௸ அக்ஷ ௵முதல் பார்த்திப௵ வரையில் பட்டம் ஆண்ட வருஷம் 2

1566—1586

இரண்டாவது ௸யார் தமையனார் புத்திரர், ஸ்ரீமத் சுப்பி மணியசுவாமியாரவர்கள் விய௵ முதல் பிலவங்க௵ வரை பட் டம் ஆண்டவருஷம் 2

1586—1608

மூன்றுவது ௸யார் தமையனார் புத்திரர், ஸ்ரீமத் வாலசுந் சுவாமியாரவர்கள் கீலக௵ முதல் யுவ௵ வரையில் பட்ட ஆண்ட௵ 2

1608—1636

நான்காவது ௸யார் தம்பி புத்திரர், ஸ்ரீமத் இராமநாதசுவா யாரவர்கள் தாது௵ முதல் குரோதி௵ வரையில் பட்டம் ஆ டவருஷம்

1636—1665

ஐந்தாவது ௸யார் தமையனார் புத்திரர் ஸ்ரீமத் சிதம்பரசு மியாரவர்கள் விசுவாவசு௵ முதல் ஸ்ரீமுக௵ வரையில் பட் ஆண்ட வருஷம்

1665—1694

ஆறுவது ௸யார் தமையனார் புத்திரர் ஸ்ரீமத் திருவேங் சுவாமியாரவர்கள் பவ௵ முதல் சித்திரபானு௵ வரையில் டம் ஆண்ட வருஷம்

1694—1703

அதற்குமேல் ௸ சுவாமியாரவர்கள் விவாஹம் செய்துகெ டார்கள்.

ஏழாவது ஷியார் தாயாதி சங்கரய்யரவர்கள் புத்திரர் ஸ்ரீமத் கனகசபாபதி சுவாமியாரவர்கள் சுபாநுஹு முதல் சுபகிருதுஹு வரையில் பட்டம் ஆண்ட வருஷம் 20

1703—1723

எட்டாவது முன் ஆறுவது பட்டம் ஆண்ட ஸ்ரீமத் திருவேங் கடசுவாமியாரவர்கள் புத்திரர் ஸ்ரீமத் சுப்பிரமணிய சுவாமியாரவ ர்கள் சோபகிருதுஹு முதல் பராபவஹு வரையில் பட்டம் ஆண் டவருஷம் 63

1723—1786

நடுவிற்காலிஹு வருஷம் 8

1786—1794

ஒன்பதாவது பிலவங்கஹு முதல் ஆனந்தஹு வரை வருஷம் 8-க்கு மேல் பெண்வழிப் பேரன் சிதம்பரமய்யரவர்கள் புத்திரர் ஸ்ரீமத் சுப்பிரமணியசுவாமியாரவர்கள் இராக்ஷதஹு முதல் தாது ஹு வரையில் பட்டம் ஆண்ட வருஷம் 22

1794—1816

இவர்கள் தான் மருது சேர்வைகாரரவர்களால் ஜப்தி செய்யப் பட்டிருந்த பாதரக்குடி வகையரா கிராமங்களை யெல்லாம் வெகு பிரயாசத்துடன் மீட்டவர்கள். அன்றியும் 1223ம் பசலி இஸ்தி மிராரியில் பாதரக்குடி மடாதிபதியாகவும் சொத்து பாத்தியஸ்தரா கவும் தாக்கல் செய்யப்பட்டவர்கள்.

பத்தாவது ஷியார் தமக்கையார் புத்திரர் ஸ்ரீமத் சேனபதி சுவாமியாரவர்கள் ஈசுரஹு முதல் துந்துமிஹு வரை பட்டம் ஆண்ட வருஷம் 46

1816—1862

இவர்கள் மந்திர சாஸ்திரத்தில் மஹாநிபுணர். கோவிலூர் ஸ்ரீ ஆண்டவர் முத்துராமலிங்கசுவாமியவர்களால் "வணிககுல வேஷ திகள் தழைய உபதேசமழை மாருது பொழியுமுகிலே" யென்று

மிகவியந்து பாராட்டிப் பாடப்பெற்றவர்கள். கழனிவாசல் கிராமத்தார் ஷெ கண்மாயை நிறைபெருக்காய்க் கட்டியதால் பாதரக்குடி நிலங்களுக்கு விகாதம் உண்டாகக் கண்டு பச்சை மண்குடத்தை மந்திரத்தை ஜெபித்து மிதக்கவிட்டுக் கரையை உடைக்கும்படிசெய்த அவ்வுடைப்பு இன்றும் "குடமுருட்டி" என்று நிலை பெற்றபேர் பெறச்செய்தவர்கள். அலக்ஷியமாய் எதிர்த்துக் கூறிய பரிசாரகர்கள் அஞ்சும்படி தங்கள் வஸ்திரங்களைக் கடித்த எலிகளை யெல்லாம் பறையறைவித்துப் பூஜாகாலத்தில் வருத்திக் காதுகளைக் கிள்ளி இனியிவ்வாறு செய்யாதீர்கள் என்று புத்தி கற்பித்து விடுத்த கருணாமூர்த்தியாயுள்ளவர்கள்.

நடுவிற்காலி வருஷம் 4

1862—1866

பதினோராவது ருத்திரோற்காரிஷூ முதல் அக்ஷயஷூ வரையில் வருஷம் 4க்கு மேல் ஷெயார் சிறியதாயார் பௌத்திரர் ஸ்ரீமத் வேங்கடாசலபதிசுவாமியாரவர்கள் பிரபவஷூ சித்திரைமீ 25உ முதல் 47 வருஷங்களாக பட்டம் ஆண்டு வருகிறார்கள். 47

1866—1913

இவர்கள் பட்டத்திற்கு வந்தகால முதற்றான் நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்குப் பெருஞ் செல்வமும் அளவில்லாத கீர்த்தியும் மிகுந்த தர்ம சிந்தையும் உண்டாயிருக்கின்றன.

347 வருஷங்களாக ஒரே ஜாதியில் வருகின்ற இத்தகைய உத்தமோத்தம வீழியப்ராமண பாரம்பரிய பரமாசாரியாரவர்களிடத்தில் ஸ்ரீ பஞ்சாக்ஷர உபதேசங் கேட்டுக்கொள்வதே நலம்.

உ

சிவமயம்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	6	பவர்களால்	பவரால்
2	11	அதனையும்	அவற்றையும்
௸	17	என்மொழியோ	எம்மொழியோ
௸	22	இஃது	இத்தொடர்
3	2	கோயிலூர் சுவாமி	கோயிலூர்ச் சுவாமி
௸	31	பெற்றவர்க்கு குலங்	பெற்றவர்க்குக் குலங்
7	2	ஸ்மார்த்த பிராமணர்	ஸமார்ததப் பிராமணர்
11	23	அகப்படாமல்	அகப்படாமையால்
௸	27	அவ்வழி	அவ்வழியை
12	9	கொளததகு	கொளத்தகு
௸	17	முன்வசனம்	முன்வசனத்தில்
13	14	ஜீலாகாருண்யம்	ஜீவகாருண்யம்
14	6	அதுவும்	அதனையும்
௸	31	அல்பாகாரம்	அல்ப்பாகாரம்
15	13	கெட்பார்க்கெல்லாம்	கேட்பார்க்கெல்லாம்
௸	16	கொஞ்ச காலமாக	கொஞ்சக் காலமாக
௸	31	ருகி வஜ	வருகிற
16	8	எந்த சாஸ்திரமோ	எந்தச் சாஸ்திரமோ
18	4	ஆதி	ஆகியில்
௸	31	நேமிக்கும்	நியமிக்கும்
19	16, 19	சிதம்பரம்மட	சிதம்பரமட
20	13	சுவாமிகளே சோழி	சுவாமிகளைச் சோழி
௸	26	யெழுதியவாகளின்	யெழுதியவர்களின்
௸	31	திரிபதார்தத	திரிபதார்த்த
22	14, 19	உடன்படிக்கை தஸ்தா	உடன்படிக்கைத் தஸ்தா
௸	21	௫௪௨	௰௪௨